முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2025 சனவரி

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

(Advanced Financial Accounting & Costing)

2025-02-01
காலை
[8.45 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 11
வினாக்கள் : 07

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே விடையளித்தல்** வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச்சொல் செவ்வை நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **வினைச்சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் **வரைவிலக்கணத்தின்** அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.5** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** 2024 மார்ச் 31 இல், ரூபா 8,450,000/- கிரயத்தைக் கொண்டிருந்த **AB Ltd.** இன் இறுதி இருப்பானது வழக்கற்றதாக (obsolete) மாறியிருந்ததுடன் அது 2024 ஏப்ரலில் ரூபா 6,000,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. இதற்கான விற்பனைத் தரகாக, விற்பனைப் பெறுமதியில் 20% கம்பனியால் செலுத்தப்பட்டது. மேற்கூறப்பட்ட இருப்பின் 2024 மார்ச் 31 இலான நிகர தேறத்தக்க பெறுமதி (NRV)

(1) ரூ. 8,450,000/-. (2) ரூ. 6,760,000/-. (3) ரூ. 4,800,000/-. (4) ரூ. 6,000,000/-.

(02 புள்ளிகள்)

**1.2** கீழ்வருவனவற்றில் கிரயக் கணக்கீடு தொடர்பான சரியான கூற்று எது?

(1) இது முழு வணிகத்தினது கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்குகிறது.

(2) நோக்கத்திற்கு இணங்க, கிரயத்தை நேர் கிரயங்களாகவும் நேரில் கிரயங்களாகவும் பிரிக்க முடியும்.

(3) வரலாற்று ரீதியான கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரமே கிரயக் கணக்கீட்டில் பயன்படுத்தப் படுகின்றன.

(4) மேற்கூறிய யாவும். (02 புள்ளிகள்)

**1.3** கீழ்வருவனவற்றில், 1890 ஆம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின்படி, சரியானதாக **அமையாதது** எது?

(1) பங்காளர்கள் சம அளவான மூலதனத்தை உள்ளிடுவதற்கு உரித்துடையவர்கள்.

(2) பங்காளர்கள் பங்குடமை நடவடிக்கைகளுக்காக தாங்கள் செலவிடும் செலவுகளை மீளப்பெற உரித்துடையவர்கள்.

(3) உள்ளிடப்பட்ட மூலதனத்திற்கான வட்டியைப் பெற பங்காளர்கள் உரித்துடையவர்கள்.

(4) பங்காளர்கள் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். (02 புள்ளிகள்)

**1.4** பின்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க :

**(a)** தொகுதிக் கிரயமிடல் (Batch costing) என்பது குறித்த கட்டளைக் கிரயமிடலின் (specific order costing) ஒரு வகை ஆகும்.

**(b)** வேலைக் கிரயமிடல் (job costing), பாண் தயாரிப்பாளர் ஒருவருக்குப் பொருத்தமானதாகும்.

**(c)** செயன்முறைக் கிரயமிடல் (process costing) ஒரு தொடர்ச்சியான செயற்பாட்டுக் கிரயமிடலைக் (operation costing) கொண்டிருக்கிறது.

மேலுள்ளவற்றில் சரியான கூற்று / கூற்றுக்களாவன :

(1) **(c)** மாத்திரம். (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும். (02 புள்ளிகள்)

**1.5** **வரையறுக்கப்பட்ட கொழும்பு புரப்பட்டீஸ் (தனியார்) கம்பனியானது** பல தொடர்மாடிக் குடியிருப்புகளில் இருந்து வாடகை வருமானத்தைப் பெற்றுக் கொள்கிறது. 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் பெறப்பட்ட மொத்த வாடகை ரூபா 962,400/- ஆகும்.

**வரையறுக்கப்பட்ட கொழும்பு புரப்பட்டீஸ் (தனியார்) கம்பனியின்** கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

| விபரம் | 2023 ஏப்ரல் 01 இல் (ரூபா) | 2024 மார்ச் 31 இல் (ரூபா) |
|---|---|---|
| முற்பணமாகப் பெற்ற வாடகை | 57,400 | 62,400 |
| நிலுவையாக உள்ள வாடகை | 42,400 | 36,800 |

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வாடகை வருமானம் :

(1) ரூ. 973,000/-. (2) ரூ. 951,800/-. (3) ரூ. 921,800/-. (4) ரூ. 1,046,600/-. (02 புள்ளிகள்)

**1.6** தொடக்கம் **1.10** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.6** LKAS-10 – அறிக்கையிடற் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் என்ற நியமத்தின்படி, ஒரு கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய சீராக்கமற்ற (non-adjusting) நிகழ்வுகளுக்கான இரண்டு (02) உதாரணங்களை அடையாளங் காண்க. (02 புள்ளிகள்)

**1.7** சிக்கனக் கட்டளைக் கணியச் (EOQ) சூத்திரத்தின் மூன்று (03) எடுகோள்களைக் (assumptions) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.8** **X** மற்றும் **Y** ஆகியோர் முறையே 3 : 2 என்ற விகிதத்தில் இலாப, நட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு பங்குடமையின் பங்காளர்கள் ஆவர். 2023 ஏப்ரல் 01 இல், **Z** என்பவர் ஒரு புதிய பங்காளராக இணைந்து கொண்டதுடன் **X, Y, Z** ஆகியோருக்கிடையில் இலாப, நட்டங்கள் முறையே 4 : 3 : 3 என்ற விகிதத்தில் பகிரப்படுகின்றன.

**X, Y** ஆகியோரின் அர்ப்பணிப்பு விகிதத்தைக் (sacrificing ratio) கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.9** கீழ்வரும் தகவல்கள் 2024 டிசெம்பர் மாதத்திற்கான **வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனியின்** கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | ரூபா |
|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 4,675,000 |
| மேலதிகநேரக் கொடுப்பனவு | 850,750 |
| தனியாள் முற்பண வருமான வரி (APIT) | 225,000 |
| கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான சம்பளக் கழிப்பனவுகள் | 425,000 |

ஊழியர் சேமலாப நிதியத்திற்கான (EPF) ஊழியர்களின் பங்களிப்பு 8% ஆகவுள்ள அதே வேளை தொழில்தருநரின் பங்களிப்பு 12% ஆகும். மேலும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான (ETF) தொழில்தருநரின் பங்களிப்பு 3% ஆகும். EPF மற்றும் ETF இற்கான பங்களிப்புகள் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தின் மீது செலுத்தப்படுகின்றன.

2024 டிசெம்பர் மாதத்திற்காக **வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனி** செலுத்த வேண்டிய நிகர சம்பளத்தைக் (net salary) கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.10** **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** என்பது ஓர் உற்பத்திக் கம்பனி ஆகும். 2024 டிசெம்பர் மாதத்தின் இறுதி வாரத்திற்கான கம்பனியின் ஓர் ஊழியர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| நாளொன்றின் சாதாரண வேலை மணித்தியாலங்கள் | 8 மணித்தியாலங்கள் (வாரம் ஒன்றிற்கு 5 வேலை நாட்கள்) |
| மணித்தியாலம் ஒன்றிற்கான அடிப்படைக் கூலி வீதம் | ரூபா 300/- |
| ஓர் அலகைப் பூர்த்தி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள நியம நேரம் | 20 நிமிடங்கள் |
| ஊக்கப்படுத்தல் மிகையூதியம் | அடிப்படை மணித்தியால வீதத்தில் சேமிக்கப்பட்ட நேரத்தின் 70%. |
| உண்மையான வெளியீடு | 210 அலகுகள் |

2024 டிசெம்பரின் இறுதி வாரத்திற்கான மேற்படி ஊழியரின் மொத்த சம்பாத்தியத்தைக் (total earning) கணிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

**லலித்** என்பவர் ரூபா 10,000,000/- பெறுமதியான 5 வாகனங்களையும் ரூபா 2,000,000/- இனைக் காசாகவும் இட்டு 2022 ஏப்ரல் 01 இல் **"லலி கார்ஸ்"** என்ற ஒரு தனியுடமை வியாபாரத்தை ஆரம்பித்தார். இது வாடகைக்கு வாகனங்களை வழங்குகின்ற ஒரு வியாபாரம் ஆகும்.

**லலி கார்ஸ்** இன் பிற சொத்துகள் மற்றும் பரிப்புகள் கீழ்வருமாறு: *(ரூபா)*

| | 2024 மார்ச் 31 இல் | 2023 மார்ச் 31 இல் |
|---|---|---|
| தளபாடமும் உபகரணமும் - முன்கொணரற் பெறுமதியில் | 225,000 | 300,000 |
| இருப்பு – எரிபொருள் | 25,500 | 32,400 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | ? | 1,825,000 |
| வியாபார கடன்கொடுத்தோர் (எரிபொருள் கொள்வனவுகள் மீது) | 230,000 | 250,000 |
| அட்டுறுவான மின்சாரம் மற்றும் நீர் | 12,500 | 14,000 |

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) வியாபாரமானது வாடகைக்கு எடுக்கப்பட்ட ஒரு கட்டடத்தில் இயங்குவதுடன், வாடகை உடன்படிக்கையின் படி, கட்டடத்திற்கான மாதாந்த வாடகை ரூபா 150,000/- ஆகும். ஆண்டிற்கான வாடகை, ஆண்டின் காலப்பகுதியில் செலுத்தப்பட்டது.

(2) **லலி கார்ஸ்** ஆனது வாகனங்களை வழங்கும்போது வாடிக்கையாளர் வகைக்கேற்ப அவர்கள் பயணம் செய்யும் கிலோமீற்றர்களின் (km) அடிப்படையில் கட்டணங்களை அறிவிடுகிறது. வாடிக்கையாளர்கள் தமது ஒவ்வொரு பயணத்தின் பின்னரும் கட்டணங்களைக் காசாகச் செலுத்துதல் வேண்டும்:

| வாடிக்கையாளர் வகை | கிலோமீற்றர் (km) ஒன்றிற்கான கட்டணம் (ரூபா) |
|---|---|
| தனியாட்கள் | 150/- |
| நிறுவனங்கள் | 130/- |

(3) கீழ்வரும் கொடுப்பனவுகள் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் (காசேட்டில்) இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | ரூபா |
|---|---|
| எரிபொருள் கொள்வனவு மீது கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு | 1,200,000 |
| பணியாளர் சம்பளங்கள் | 2,560,000 |
| மின்சாரம் மற்றும் நீர் | 128,000 |
| வாகனப் பராமரிப்பு | 400,000 |
| வங்கிக் கட்டணங்கள் | 5,000 |
| வாடகை | 1,800,000 |

(4) பதிவுகளின்படி, **லலி கார்ஸ்** ஆனது ஆண்டின் காலப்பகுதியில் பின்வரும் விற்பனை அளவுகளை (sales volumes) அடைந்திருந்தது :

| | கிலோமீற்றர்களின் எண்ணிக்கை (km) |
|---|---|
| தனியாட்கள் | 25,000 |
| நிறுவனங்கள் | 30,000 |

(5) ஆண்டின்போது எவ்வித ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கொள்வனவுகளும் இடம்பெறவில்லை.

(6) பொறி மற்றும் உபகரணமானது கிரயத்தில் நேர்கோட்டு முறையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும். மேலும் சொத்துகளின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 10 ஆண்டுகள் |
| தளபாடம் மற்றும் உபகரணம் | 04 ஆண்டுகள் |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக.**

(a) 2023 ஏப்ரல் 01 இலான மூலதன (உரிமையாண்மை) மீதி (03 புள்ளிகள்)

(b) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபாரத்தின் நிகர இலாபம் (07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**சோனியா, ஆன்** மற்றும் **மாயா** ஆகியோர் இணைந்து **SAM பங்குடமை** என்ற அழகுசாதன நிலையம் ஒன்றை 2024 சனவரி 01 இல் ஆரம்பித்தனர் அவர்கள் இலாப நட்டங்களை முறையே 2 : 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர்.

உங்களுக்குக் கீழ்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகர இலாபம் ரூபா 1,540,000/- ஆக இருந்தது.

(2) பங்குடமை உடன்படிக்கை பின்வருவனவற்றை வழங்குகிறது :

- **ஆன்** ரூபா 70,000/- மாதாந்தச் சம்பளம் பெற உரித்துடையவர்.
- 2024 சனவரி 01 இல் பங்காளர்களின் ஆரம்ப மூலதனக் கணக்கு மீதிகளுக்கு 5% வட்டியைப் பெற பங்காளர்கள் உரித்துடையவர்கள்.

(3) கீழ்வரும் மீதிகள் பங்குடமையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன : *(ரூ.'000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| 2024 சனவரி 01 இல் மூலதனக் கணக்குகள்: | | |
| **சோனியா** | | 3,000 |
| **ஆன்** | | 1,000 |
| **மாயா** | | 2,000 |
| 2024 சனவரி 01 இல் நடைமுறைக் கணக்குகள்: | | |
| **சோனியா** | | 500 |
| **ஆன்** | 300 | |
| **மாயா** | | 800 |
| 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போதான எடுப்பனவுகள்: | | |
| **சோனியா** | 520 | |
| **ஆன்** | 280 | |

(4) 2024 டிசெம்பர் 31 இல், **மாயா** பங்குடமையில் இருந்து விலகத் தீர்மானித்ததுடன், **சோனியாவும் ஆன்** உம் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொண்டு, அதே பெயரின் கீழ் பங்குடமையைத் தொடர்ந்து நடத்திச்செல்லத் தீர்மானித்திருந்தனர். **மாயா**வுக்கான அனைத்து நிலுவைக் கொடுப்பனவுகளும் 2025 சனவரி 01 இல் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்படவுள்ளன.

(5) 2024 டிசெம்பர் 31 இலான பங்குடமையின் நன்மதிப்பு (Goodwill) ரூபா 1,000,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், நன்மதிப்புக் கணக்கொன்றைப் பேணாது பங்காளர் மூலதனக் கணக்குகள் ஊடாக அது சீராக்கம் செய்யப்பட வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **SAM பங்குடமையின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக:**

(a) பங்காளர்களின் மூலதனக் கணக்குகள். (04 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள். (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**RAISE விளையாட்டுக் கழகம்** என்பது தனது அங்கத்தவர்களுக்கான விளையாட்டுச் செயற்பாடுகளை வழங்குவதற்காக 2015 இல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு விளையாட்டுக் கழகம் ஆகும். இதன் அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த அங்கத்துவச் சந்தாக் கட்டணம் ரூபா 2,000/- ஆக உள்ளதுடன் 2024 சனவரி 01 இல் இக்கழகத்தில் 350 அங்கத்தவர்களும் இருந்தனர்.

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

(1) அங்கத்துவச் சந்தா பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு :

- 2024 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் 2023 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவச் சந்தாக் கட்டணங்களை 10 அங்கத்தவர்கள் செலுத்தியுள்ளனர்.
- 2024 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் 2025 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவச் சந்தாக் கட்டணங்களை 6 அங்கத்தவர்கள் செலுத்தியுள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2024 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவச் சந்தாக் கட்டணங்களை 2 அங்கத்தவர்கள் செலுத்தியிருந்தனர்.
- 2024 டிசெம்பர் 31 இல், எவ்வித அங்கத்துவச் சந்தாக் கட்டணங்களும் நிலுவைகளாக இல்லை.

(2) **RAISE விளையாட்டுக் கழகத்தின்** ஏனைய பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது :

| | ரூபா |
|---|---|
| **பெறுவனவுகள் :** | |
| நன்கொடை | 620,000 |
| வைப்புகள் மீதான வட்டி | 50,500 |
| **கொடுப்பனவுகள் :** | |
| பயிற்றுவிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள் | 355,300 |
| விளையாட்டு உபகரணக் கொள்வனவு | 135,000 |
| கூலிகள் | 369,000 |
| சிற்றுண்டிகளுக்கான செலவினங்கள் | 67,000 |
| மின்சாரம் | 53,000 |
| மைதானப் பராமரிப்பு | 350,000 |
| விளம்பரப்படுத்தல் | 84,000 |

(3) 2024 அக்டோபர் 01 இல் ஒரு புதிய விளையாட்டு உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டதுடன், விளையாட்டு உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும். விளையாட்டுக் கழகம் அதன் விளையாட்டு உபகரணங்களை கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்கிறது. பழைய விளையாட்டு உபகரணங்கள் 2024 சனவரி 01 இல் முழுமையாகத் தேய்மானஞ் செய்யப்பட்டுள்ளன.

(4) 2024 செப்ரெம்பர் 01 இல், விளையாட்டுச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக ஒரு அரசு-சாரா நிறுவனத்திடம் (NGO) இருந்து ரூபா 620,000/- விசேட நன்கொடையொன்று காசாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **RAISE விளையாட்டுக் கழகத்தின்** கீழ்வருவனவற்றைத் தயாரிக்குக :

(a) அங்கத்தவர்களின் சந்தாக் கணக்கு. (04 புள்ளிகள்)

(b) வருமான, செலவினக் கணக்கு. (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) கீழ்வரும் தகவல்கள் பணி இல. **102** தொடர்பில் **வரையறுக்கப்பட்ட ரவி கம்பனியின்** ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| நேர் மூலப்பொருள் | 10,000 கிலோகிராம் - கிலோகிராம் ஒன்றிற்கு ரூபா 750/- வீதம். |
| நேர் கூலி | 500 மணித்தியாலங்கள் - மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 1,500/- வீதம் |
| உற்பத்தி மேந்தலை | மொத்த நேர் கூலிக் கிரயத்தில் 150% |

கம்பனி, உற்பத்திக் கிரயத்தில் 25% இலாபத்தைப் பேணுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

பணி இல. **102** இற்காக விதிக்கப்பட வேண்டிய விலையைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட லஸ்ஸன குளோத்திங் கம்பனி** இரண்டு உற்பத்திப் பிரிவுகளையும் (**P1** மற்றும் **P2**) ஒரு சேவைப் பிரிவையும் (**S1**) கொண்டுள்ளது.

இக்கம்பனி 2025 மார்ச் மாதத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பாதிடப்பட்ட உற்பத்தி மேந்தலைகளாகக் கீழ்வருவனவற்றைக் கொண்டுள்ளது :

| | **ரூபா** |
|---|---|
| மின்சாரம் | 787,500 |
| வாடகை | 275,000 |
| ஊழியர்களின் சேமநலன் | 303,000 |
| இயந்திரத்திற்கான தேய்மானம் | 60,000 |

2025 மார்ச் மாதத்திற்கான கீழ்வரும் பாதிடப்பட்ட தரவுகள் தரப்பட்டுள்ளன :

| | **P1** | **P2** | **S1** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| நேரில் பொருள்கள் (ரூபா) | 725,000 | 875,000 | 250,000 | 1,850,000 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 25 | 30 | 5 | 60 |
| இயந்திரக் கிரயம் (ரூபா) | 10,000,000 | 12,000,000 | 8,000,000 | 30,000,000 |
| மின்சாரப் பாவனை (கிலோவாற்று) | 12,000 | 8,000 | 2,500 | 22,500 |
| பயன்படுத்தப்பட்ட தரைப் பரப்பு (சதுர அடி) | 2,500 | 2,300 | 200 | 5,000 |
| கிரயப் பகிர்வு – **S1** | 65% | 35% | - | - |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் மேந்தலைகள் எவ்வாறு ஒதுக்கப்பட்டு, பகிரப்படுகின்றன என்பதைக் காட்டும் கூற்றினைத் **தயாரிக்குக.** (07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(A) மெத்தைகள் தயாரிப்பு நிறுவனமான **வரையறுக்கப்பட்ட ஸ்மித் கம்பனியின் பொருள் Q** தொடர்பான கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| வருடாந்தக் கேள்வி | 4,000 அலகுகள் |
| அலகொன்றின் கொள்வனவு விலை | ரூபா 12,500/- |
| பாவனை | 400 - 900 அலகுகள் |
| கட்டளைக் காலம் | 2 - 4 மாதங்கள் |
| அலகொன்றின் வருடாந்த நிறுத்தி வைத்தல் கிரயம் | கொள்வனவு விலையில் 10% |
| கட்டளையிடற் கிரயம் | கட்டளை ஒன்றிற்கு ரூபா 506,250/- |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருனவற்றைக் **கணிக்குக** :

(a) சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ). (02 புள்ளிகள்)

(b) மீள் கட்டளை மட்டம். (02 புள்ளிகள்)

(c) உயர்ந்தபட்ச இருப்பு மட்டம். (02 புள்ளிகள்)

(B) 2024 ஏப்ரல் மாதத்திற்கான **வரையறுக்கப்பட்ட வெலிங்டன் (தனியார்) கம்பனியின்** மூலப்பொருள் **"X"** தொடர்பான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| 2024 ஏப்ரல் 01 | ஆரம்ப இருப்பு மீதி - ரூபா 12/- விலையில் 500 அலகுகள் |
| 2024 ஏப்ரல் 12 | ரூபா 15/- விலையில் 300 அலகுகளின் கொள்வனவு |
| 2024 ஏப்ரல் 20 | 400 அலகுகளின் வழங்கல் |
| 2024 ஏப்ரல் 23 | ரூபா 16/- விலையில் 150 அலகுகளின் கொள்வனவு |
| 2024 ஏப்ரல் 28 | 250 அலகுகளின் வழங்கல் |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

முதலில் உள்வருவதை முதலில் வெளியனுப்புகின்ற (FIFO) முறையின் கீழ், 2024 ஏப்ரல் மாதத்திற்கான மூலப்பொருள் **"X"** இற்குரிய களஞ்சியப் பேரேட்டைத் (Stores Ledger) **தயாரிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

2024 மார்ச் 31 இல் **வரையறுக்கப்பட்ட Everbright (தனியார்) கம்பனியின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு :

*(ரூபா)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (1,000,000 சாதாரண பங்குகள்) – 2023 ஏப்ரல் 01 இல் | | 10,000,000 |
| கைக்கொள் இலாபம் - 2023 ஏப்ரல் 01 இல் | | 13,550,000 |
| விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு - உரிமை வழங்கல் | | 4,000,000 |
| **பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்:** | | |
| இயந்திரம் | 7,000,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 5,500,000 | |
| **2023 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம்:** | | |
| இயந்திரம் | | 2,600,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 2,000,000 |
| தொக்கு | 1,425,300 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள். | 16,524,500 | 6,900,000 |
| கையில் உள்ள காசும் வங்கியில் உள்ள காசும் | 26,444,300 | |
| 2023 ஏப்ரல் 01 இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகை | | 430,000 |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் | 2,000,000 | |
| விற்பனைகள் | | 57,645,000 |
| விற்பனைக் கிரயம் | 32,375,000 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 3,530,000 | |
| அலுவலகப் பராமரிப்பு | 200,000 | |
| விற்பனைத் தரகு (பணிசை) | 450,000 | |
| விளம்பரப்படுத்தல் | 316,000 | |
| மின்சாரம் | 675,000 | |
| நீர் | 125,000 | |
| பயணங்கள் மற்றும் போக்குவரத்துச் செலவினங்கள் | 205,900 | |
| வங்கிக் கட்டணங்கள் | 84,000 | |
| அலுவலக வாடகை | 1,170,000 | |
| செலுத்திய வருமான வரி | 900,000 | |
| இயந்திர விற்பனைக் கணக்கு | | 1,800,000 |
| | **98,925,000** | **98,925,000** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) பொறி மற்றும் உபகரணம் ஆகியன கிரயத்தில் நேர்கோட்டு முறையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும். பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| இயந்திரம் | 5 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 4 ஆண்டுகள் |

(2) 2022 யூலை 01 இல் ரூபா 2,100,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு இயந்திரம் 2024 சனவரி 01 இல் ரூபா 1,800,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டதுடன் விற்பனை வருமானம் முழுமையாக இயந்திர விற்பனைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது. அதைத் தவிர, வேறு எந்தப் பதிவுகளும் கணக்கேடுகளில் செய்யப்படவில்லை.

(3) 2024 மார்ச் 31 இல் கணக்கேடுகளில் கீழ்வரும் செலவினங்கள் கணக்கிற் கொள்ளப்படவில்லை :

| | ரூபா |
|---|---|
| முன்னரே செலுத்தப்பட்ட வாடகை | 90,000 |
| 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் | 80,000 |

(4) 2024 சனவரி 31 இல், கம்பனி தற்போதுள்ள அனைத்து சாதாரண பங்குதாரர்களுக்கும் உரிமை வழங்கலைச் (right issue) செய்திருந்ததுடன் பங்கொன்று ரூபா 8/- விலையில், 2023 ஏப்ரல் 01 இல் வைத்திருந்த ஒவ்வொரு 2 பங்குகளுக்கும் ஒரு பங்கு என்ற அடிப்படையில் வழங்கியிருந்தது. அனைத்துப் பங்குதாரர்களும் உரிமை வழங்கலை எடுத்திருந்ததுடன் ஆண்டின் காலப்பகுதியில் அனைத்துப் பங்குதாரர்களிடமிருந்தும் காசு சேகரிக்கப்பட்டது. பெறப்பட்ட காசு, விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு – உரிமை வழங்கல் இற்கு செலவுப்பதிவு செய்யப்பட்டது.

(5) 2023/24 வரிமதிப்பாண்டிற்காக மதிப்பிடப்பட்ட வருமான வரிப் பரிப்பு (income tax liability) ரூபா 2,150,000/- என்பதுடன் அதில் ரூபா 900,000/- ஆனது ஆண்டின்போது காலாண்டுத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தப்பட்டுள்ளது.

(6) கம்பனி 2023 டிசெம்பர் 31 இல் பங்கொன்றிற்கு ரூபா 2/- என்ற அடிப்படையில் இடைக்காலப் பங்கிலாபம் ஒன்றை வழங்கியுள்ளது.

(7) பணிப்பாளர் சபையானது 2024 மார்ச் 31 இலான வியாபார வருமதிகளின் 10% இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகையைப் பேணத் தீர்மானித்தது.

(8) நிதிக் கூற்றுகள் வழங்கப்படுவதற்காக 2024 யூன் 30 இல் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

முகாமையின் பாவனைக்காக **வரையறுக்கப்பட்ட Everbright (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக:**

(a) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (14 புள்ளிகள்)

(b) 2024 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று (11 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி C முடிவு

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |